1968, மார்ச் 5]

திரு வ. ஜார்ஜ்: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கடல் பகுதிகளில் தடுப்புச் சுவர் போட முன்னைய அரசு 20 லட்சம் ரூபாய் திட்டத்தைப் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இந்த அரசு கடற்கரையோரப் பகுதிகள் எல்லாவற்றிலும் கடல் அரிப்பு பாதுகாப்புச் சுவர் (போடுவதாக தங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டும் இப்போது) எந்த அளவுக்கு அதிகமாகச் செய்ய முன் வந்திருக்கிறார்கள் அல்லது அதிலிருந்து பின்வாங்கி விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நீள கடற்கரை முழுவதும் சுவர் போடப்போவதாகச் சொல்லவில்லை. பயங்கர அரிப்பு, புயல் ஏற்படுகிற பகுதிகளில் மட்டும் சுவர் போடுகிற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் இருந்து இந்த அரசு பின்வாங்கவில்லை. அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும்.

கோட்டாட்சித் தலைவர் அலுவலகம், உசிலம்பட்டி.

*144 வினு.—திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா:

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியிலுள்ள கோட்டாட்சித் தலைவர் (R.D.O.) அலுவலகத்தை திருமங்கலத்துக்கு மாற்றும் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: இது போன்ற செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

திரு என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் உசிலம்பட்டியில் இருப்பதால் மக்கள் போய் வருவது கஷ்டமாக உள்ளது. ஆகவே அதை டெல்லி-கன்னியாகுமரி பாதையில் உள்ள அந்தக் கோட்டத்திலேயுள்ள மிகப்பெரிய ஊரான திருமங்கலத்திற்கு மாற்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: தற்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னேன்.

DR. H. V. HANDE: Sir, Usilampatti belongs to my leader, Thiru Mookiah Thevar's constituency. May I know whether there was at any time any proposal to transfer the Revenue Divisional Office from Usilampatti to Tirumangalam and if so, the reasons therefor?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: There have been representations, but there is no proposal at present.

கொத்துக்கடலை.

*145 வினு.—திரு எஸ். ஜே. ராமசாமி: மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1967-ம் ஆண்டில் வெளி மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்கு முழு கடலை இறக்குமதி செய்ய எத்தனை வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

(இ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு டன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது?

(உ) இதில் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்ட டன்கள் எத்தனை?